**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 11 ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.08/2026**

IN

**அசல் வழக்கு எண்.199/2024**

1. மாவட்ட பதிவாளர், தென்காசி
2. மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், தென்காசி
3. மாவட்ட கல்வி அலுவலர் தென்காசி
4. மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் தென்காசி
5. வட்டார கல்வி அலுவலர் சங்கரன்கோவில்
6. தமிழ்நாடு அரசு அதன் தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர்

....மனுதாரர்கள்/
12 முதல் 17 பிரதிவாதிகள்

/எதிர்/

1. வெள்ளைச்சாமி
2. அருணகிரிச்சாமி
3. மதன்
4. இராமர்
5. குமரி ஆனந்தன்
6. பாலசுப்பிரமணியன்

(மேற்படி வாதிகள் தங்களுக்காகவும் அரியநாயகிபுரம் இந்து நாடார் உறவின்முறை உயர்துவக்கப்பள்ளி அரியநாயகிபுரத்தின் பொதுக்குழு உறுப்பினர்களின் பிரதிநிதிகள் நிலையிமையிலும்)

....1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/
வாதிகள்

7. அரியநாயகிபுரம் இந்து நாடார் உறவின்முறை உயர்துவக்கப்பள்ளி அதன் தலைவர் மூலம்.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:32:55 +0530

8. அரியநாயகிபுரம் இந்து நாடார் உறவின்முறை
உயர்துவக்கப்பள்ளி அதன் செயலாளர் மூலம்
9. பொ.பழனிச்சாமி
10. ந.அருணகிரிச்சாமி
(மேற்படி வாதிகள் தங்களுக்காகவும் அரியநாயகிபுரம்
இந்து நாடார் உறவின்முறை உயர்துவக்கப்பள்ளி
உறுப்பினர்களின் பிரதிநிதிகள் நிலைமையிலும்)
11. அ. இராமகிருஷ்ணன்
12. து. இராமராஜ்
13. பா.மாரிக்கனி
14. ப.அ. மாரியப்பன்
15. ஆ.கனகராஜ்
16. அ. கந்தசாமி
17. க.பழனிச்சாமி ....7 முதல் 17 எதிர்மனுதாரர்கள்/
1 முதல் 11 பிரதிவாதிகள்

இம்மனுவானது 02.06.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.S.ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.சங்கரநாராயணன் அவர்கள் ஆஜராகியும், 7 முதல் 17 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 17 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், மனுதாரர்கள் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

மனுதாரர்களால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151-ன் கீழ், அசல் வழக்கில் கடந்த 07.07.2025ம் தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:33:02 +0530

மனுதாரர்களுக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–</u>**

இந்நீதிமன்றத்தில் இம்மனுவின் 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கில் கண்ட சொத்து விபரத்தில் உள்ள பள்ளி நிர்வாக கமிட்டி சம்பந்தமாக பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அசல் வழக்கில் கண்ட தபசில் சொத்து விபரத்தில் உள்ள பள்ளி நிர்வாக கமிட்டி சம்பந்தமாக பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் உள்ளவாறு நிர்வாக கமிட்டி உள்ளதால் பள்ளி நிர்வாக கமிட்டி சம்பந்தமாக இந்த 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் உண்மைகளை மறைத்து அசல் வழக்கை மனுதாரர்களுக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தில் மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் மூலம் ஆஜர் செய்து மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய கடந்த 07.07.2025 ம் தேதி கடைசி வாய்தா ஏற்பட்டு இருந்த நிலையில் மனுதார் அரசு பணி நிமித்தமாக வழக்கு சம்பந்தப்பட்ட சான்று ஆவணங்களுடன் மனுதாரர் தரப்பு அரசு வழக்கறிஞரை சந்திக்க முடியாத நிலையிலும் வழக்கு சான்று ஆவணங்களை மனுதாரர் தரப்பு வழக்கறிஞரிடம் கொடுக்க காலதாமதம் ஏற்பட்டுவிட்டதால் இந்நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியாத காரணத்தினாலும் இந்நீதிமன்றத்தில் மனுதாரரை அழைத்தும் ஆஜராகாத காரணத்தாலும் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும் மேற்படி அசல் வழக்கில் கடந்த 07.07.2025 ம் தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றும், ஆகையால், அசல் வழக்கில் கடந்த 07.07.2025 ம் தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்களுக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:33:09 +0530

2) இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter என கற்றறிந்த வழக்கறிஞர்களால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) இம்மனுவானது மனுதாரர்களால், அசல் வழக்கில் கடந்த 07.07.2025ம் தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்களுக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுவின் மனுதாரர்கள் தரப்பில், மனுவில் கூறியுள்ள காரணத்தை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

7) இருப்பினும், அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்ப்பு வழங்கப்பட வேண்டியது அவசியம் என்பதாலும், மேலும், 1 முதல் 17 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளதாலும், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:33:16 +0530

**8) இறுதியாக**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 11ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:33:23 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-**

– இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:33:33 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**
I.A.No.08/2026
in
O.S.No.199/2024
**உத்தரவு (Draft / Fair)**

**நாள் : 11.06.2026**